படைப்பு
சமூகத்தின் இணைப்பு

உளி - 8 | ஓசை - 8 | பிப்ரவரி - 2025 | திங்களிதழ்

www.padaippu.com

# கல்வெட்டு

கவிதை மின்னிதழ்



அரசு பதிவு எண்: 521/2018

நிறுவனர் & ஆசிரியர்:
ஜின்னா அஸ்மி

நிர்வாகக் குழு:
சகா (சலீம் கான்)
ஜெ. ராஜா ஜெயகரன்

ஆசிரியர் குழு:
படைப்பு தேர்வுக்குழுமம்

இதழ் உருவாக்க உதவி:
ஷென்பா
பிரபுசங்கர் க
தி.கலையரசி

வடிவமைப்பு:
ஆர்.பிரகாஷ்

இணையதள முகவரி:
padaippu.com

அலுவலக முகவரி:
படைப்பு குழுமம்
# 8, மதுரை வீரன் நகர்,
கூத்தப்பாக்கம்,
கடலூர் - 607 002

படைப்பு பிரைவேட் லிமிடெட்
# 3, தரைத்தளம், அஜந்தா டவர்ஸ்,
கார்ப்பரேஷன் காலனி தெரு,
கோடம்பாக்கம்,
சென்னை - 600 024

admin@padaippu.com
+91 73388 97788, 73388 47788

படைப்புகள் யாவும் முகநூல் படைப்புக்குழுவிலிருந்து தேர்வு செய்யப்பட்டவை.
இந்த மின்னிதழில் தங்களது படைப்புகள் வரவேண்டுமெனில் முகநூல் படைப்புக் குழுவில் இணைந்து படைப்புகளை பதிய வேண்டுகிறோம். மின்னஞ்சலில் அனுப்பப்படும் கவிதைகளை பிரசுரிக்க இயலாது.

| | |
|---|---|
| சசிகலா திருமால் | 04 |
| மெகராஜ் பேகம் | 05 |
| கா. ந. கல்யாணசுந்தரம் | 05 |
| தஞ்சை சீனிவாசன் | 05 |
| நித்யா | 05 |
| கயல் | 06 |
| ஆத்மாஜீவ் | 06 |
| வ.ரா.தமிழ் நேசன் | 07 |
| த. ரவீந்திரன் | 07 |
| அன்பழகன் ஜி | 07 |
| முனியாண்டி ராஜ் | 07 |
| தி.கலையரசி | 08 |
| காசாவயல் கண்ணன் | 08 |
| தா.பிரபுபாரதி | 09 |
| தனபாலன் தர்ஷன் | 09 |
| ஈரோடு கதிர் | 09 |
| மகா செல்வம் | 10 |
| சாய் மீரா | 11 |
| கோ. சிவா தமிழ் | 11 |
| ச. இராஜ்குமார் | 11 |
| ஸ்ரீவாரி மஞ்சு | 12 |
| நிஷா ராஜேஷ் | 13 |
| மகேஷ் சிபி | 13 |
| ஐ.தர்மசிங் | 13 |
| உமா மஹேஸ்வரி பால்ராஜ் | 14 |
| மணி அமரன் | 15 |
| குளோரிசக்தி | 15 |
| சங்கரி சிவகணேசன் | 16 |
| கௌ ஆனந்தபிரபு | 17 |
| வீ வா கதிரவன் | 17 |
| ஆ.விஜயலெட்சுமி | 18 |
| தங்கேஸ் | 18 |
| சுப்பையா கந்தையா | 19 |
| மா. காளிதாஸ் | 20 |
| ரிஸ்கா முக்தார் | 21 |
| கி.கவியரசன் | 22 |
| நம்.திரு.ரஅம்ர | 22 |
| அ.சீனிவாசன் | 22 |
| ச.ஆனந்தகுமார் | 23 |
| த.முருகன் | 23 |
| கு. பிரபாகரதாஸ் | 23 |
| வத்திராயிருப்பு தெ.சு.கவுதமன் | 24 |
| தங்கராஜ் பழநி | 25 |
| ரகுநாத் வ | 26 |
| ஜீ.சுமித்ரா | 26 |
| நந்தா | 27 |
| கா வெங்கடேஸ்வரன் | 28 |
| பெரணமல்லூர் சேகரன் | 29 |
| வி.வி. கலைச்செல்வி | 30 |
| நரேன் | 30 |
| கீதாவணி | 31 |
| பன்னீர்செல்வம் | 32 |
| பஹ்றியா பாயிஸ் | 33 |
| மௌனி | 33 |
| ராஜிலா ரிஜ்வான் | 34 |
| ஆரிசன் | 35 |
| அ.ராஜ்குமார் | 35 |
| பிரபுசங்கர் க | 36 |
| ஷீபா ராணி | 36 |
| ஜெயசிங் டிஜி | 37 |
| கோ.லீலா | 37 |
| சித்ரா புபேஷ்குப்தா | 38 |
| கோ. பாரதிமோகன் | 39 |
| அபூ சுகந்தன் | 39 |



## மலரினும் மெல்லியது காதல்...

உன்னை பிடித்ததால்தான்
என்னுள் வைத்துள்ளேன்...
ஆனால் பிடித்து வைக்கவில்லை
உன் விருப்பம் போல எப்போது வேண்டுமானாலும்
நீ விலகிக் கொள்ளலாம்...
வலிக்காமல் மட்டும் பார்த்துக் கொள்
அது போதும் எனக்கு...
ஏனென்றால்
மலரினும் மெல்லியது காதல்...

நீ என்னுள் விதைத்திட்ட
நம்பிக்கை விதைகள் யாவும்
விருட்சமாய் வளர்ந்து காதலெனும்
மணம் வீசிக்கொண்டிருக்கையில்...
வேரோடு பிடுங்குகிறாய்
வளர்த்தவனை நம்பி கழுத்தறுப்பட்ட ஆடென
துடித்துடித்து சாகிறதென் காதல்...
தணிய மறுத்து எரிந்துக் கொண்டிருக்கும்
என் இதயத்தில் பரவிய துரோக தீதனை
கண்ணீரால் அணைத்திட முயன்று
தோற்றுத்தான் போகிறேன் நான்...

அதன்பின்...
காலத்தின் பிடியில் சிக்கி எவ்வளவு சுழன்றாலும்
சலிப்பதேயில்லை எனக்கு உனது நினைவுகள்...

ஆயினும் உன் பிரிவெனும்
ஆற்றாமையில் மட்டும்
கன்னம் தொட மறப்பதேயில்லை கண்ணீர்...
உனக்கு வேண்டுமானால்
நான் கண்ணம்மாவாக
இல்லாதிருந்திருக்கலாம்...

ஆனால்...
என் பாரதி நீதான்...
என்செய்வது?...
நேசித்தே பழகிய இதயம்
மறக்க மறுத்தலிக்கிறதே...

சரி விடு...
விதியின் விளையாட்டு இதுவென்றால்
என் கண்ணீரிலும் கவிதையிலும் மட்டுமே
வாழ்ந்துவிட்டு போகட்டும் நம் காதல்...
காதலின் எழுதப்படாத விதியும்
அதுதானே...

இப்போதும் சொல்கிறேன்
எப்போது வேண்டுமானாலும்
நீ விலகிக் கொள்ளலாம்...
மீண்டும் ஒருமுறை வலிக்காமல் மட்டும்
பார்த்துக்கொள்
அது போதும் எனக்கு...
ஏனென்றால்
மலரினும் மெல்லியது காதல்...

● சசிகலா திருமால்



நான் படித்த சிறுகதையில் மட்டுமே
அந்த குதிரை எனக்கு பிடித்த
வண்ணத்தில் இருந்தது

அதில் வரும் ஏழை சிறுவனின்
சட்டைப்பை கிழியாமல் இருந்தது

வேலைக்கு செல்லாமல்
வீட்டிலேயே இருக்கும்
அம்மா கையில் கரண்டிக்கு
பதிலாக பேனாவை வைத்திருந்தாள்

பணிக்குச் சென்று வந்த அப்பா
வியர்வை வாடை இல்லாமல்
மிடுக்காக வந்தார்

கேலி செய்யாத அண்ணனும்
அடம்பிடித்து அழுகாத
தங்கையும் கதைத்துக் கொண்டிருந்தார்கள்

கதை எழுத்தாளர் உடையது தான்
கற்பனைகள் என்னுடையது
என்று கர்வமாக சொல்லிக்கொள்ள
புத்தக வாசிப்பில் மட்டுமே
சாத்தியம்...

● மெகராஜ் பேகம்

அரசு விருதின்றி
காலமெல்லாம் கானமழை
குயில் பாட்டு

● கா. ந. கல்யாணசுந்தரம்

உறங்கும் போது
விழித்துகொள்கிறது
கனவு

● தஞ்சை சீனிவாசன்

மகள் சிந்திய பாற்சோற்றுப்
பருக்கைகள் மோட்சம் பெற்றன
நட்சத்திரங்களாய்...

● நித்யா



## உணர்வாயோ மாயா

உன்னிடம் குழந்தையாய்
செல்லம் கொஞ்ச விழையும் நானே
உனக்கு ஒன்றெனில் தாயாகி
அரவணைக்க விரும்புகிறேன்

உன் மடி மீது தலை சாய்த்து
விழி மூட விரும்பும் நானே
உன்னை என் மடி சாய்த்து
தலைக்கோதி தட்டிக்கொடுத்து
ஆசுவாசப் படுத்த
பேராசை கொள்கிறேன்

உனக்காக காத்திருக்கும்
நொடிகளை உவகையாய்
ரசித்து கடக்கும் நானே
எனக்காக நீ காத்திருப்பதை
அறிந்ததும் இன்பச்சலணம்
கொள்கிறேன்

உனை தேடும் நொடியிலும்
உன் அருகாமையிலும்
சிலிர்க்கும் நானே
எனை நீ தேடினாய் என்றுணரும் போது
இன்னுமே அதிகமாய்
சிலிர்த்து உறைகிறேன்

● கயல்

உறக்கம் என் கண்களுக்கு வெகுதூரத்தில்
அலைந்து கொண்டிருக்கிறது.

கல்லறை நிலத்தின் மேல் அமர்ந்து கொண்டு
தொலைந்துபோன என்னை தேடுகிறேன்.

இயல்பாக இல்லாத ஒருவனின்
இதயத்திலிருந்து ஒன்றன்பின் ஒன்றாய்
புறப்படும் புலம்பல்கள் ஒரு வட்டத்தில் சுழல்கிறது.

தன்சுழற்சியை நிறுத்தாமல்
சுழல்கிற பூமியின் சாயல்
படிந்திருக்கிறது அதன்மேல்.

விடியலின் சத்தத்தைக் கேட்க
ஆர்வமாயிருக்கிறது காதுகள்.

பாரங்களில் அழுந்திக்கிடக்கும்
இந்த இரவினடியில் நசுங்கிக் கொண்டிருக்கிறேன்
இப்போது நான்.

● ஆத்மாஜீவ்



பால் வீதியில்
அலைந்து அலைந்து
கனிவுற்ற நட்சத்திரம் ஒன்று
சிறு ஒளியோடு
அவள் கை சேர்கிறது.

எட்டி பறித்துவிட
இயலாது என்பதால் – தன்
இறஞ்சுதல் கண்டு
பெருங்கருணையோடு
இறங்கிவந்து நட்சத்திரத்தை
இரு விரல் குவித்து
ஏந்துகிறாள்.

நட்சத்திரத்தை
மோதிரமாகவோ,
கழுத்துப் பட்டை
பதக்கத்தில் பதிக்கவோ
தன் உள்ளங்கையில் வைத்து
யோசிக்கிறாள்.

இடை நழுவும் ஒட்டியாணத்தை
என்ன செய்வதென்று அறியாத
சிறு பெண்
கையிலிருக்கும் நட்சத்திரத்தை
மீண்டும்
வானத்திற்கே அனுப்பிவைக்கிறாள்
பெருங் காதலோடு!

பூமியிலிருந்து திரும்பி வந்த
நட்சத்திரத்தை
பால் வீதியின் அதிசயமென
காவலரணாகி சுற்றி வருகின்றன
ஆயிரமாயிரம் நட்சத்திரங்கள்!

● வ.ரா.தமிழ் நேசன்

வெற்றிடத்தில் உலவும்
காற்றின் ஈரப்பதத்தில்
நம் பிரிவின் துயர்...

● த. ரவீந்திரன்

என் மௌனம்
பெரும் குமுறல்.
உன் சப்தம்
வெறும் கூச்சல்.

● அன்பழகன் ஜி

கடவுள் பார்த்துக் கொள்வாரென்ற
துணிச்சல்களில் காணாமல் போகின்றன
கோவில் நகைகளும் நம்பிக்கைகளும்

● முனியாண்டி ராஜ்



தாய்விலங்கின் பிரசவ வலி தீர
தன்னையே அதற்கு
இரையாக்கிக் கொள்ளும்
சவலைப் பிள்ளையின் அர்ப்பணிப்பு
உன் உலகில்
நான் பலவீனமான உயிரானாலும்
உனக்கு மருந்தாகத் துடிக்கிற
என் காதலின் ஊழ்

● தி.கலையரசி

குளிரை
இழுத்துப் போர்த்திக்கொண்டு கிடந்தேன்
சாளரம் வழியே
சன்னமாய் நுழைந்த
வெயிலோன்
சத்தம் இல்லாமல்
ஒரு வெப்ப முத்தம் வைத்தான்.

சோம்பலை சுருட்டி மடித்தேன்
காலம் காத்திருந்தது
கால்களில் சக்கரம் பொருத்த.

● காசாவயல் கண்ணன்



மரத்தில் பறவைகள்
பிரிந்து செல்கின்றன
கிளைகள்

● தா.பிரபுபாரதி

குவிக்கப்பட்டிருந்த
மணலை
கிளறிப் பார்த்தேன்

இன்னும் நினைவில்
வைத்திருந்தது
நதியை...!

தனபாலன் தர்ஷன்

## தெரிந்த சொற்கள்தான்...

தேவையின்போது
பயன்படுத்தத்
தெரிவதில்லை

தேவையில்லாபோது
பயன்படுத்தாமலிருக்கத்
தெரிவதில்லை!

● ஈரோடு கதிர்



என் முன்னே நீட்டப்படும்
யாசிப்பு கரங்களை
நிமிர்ந்து பாராமலே
நிராகரிக்க கற்றுக் கொண்டேன்!

சாலையோர மரங்களில்
உதிர்ந்து கிடக்கும்
பூக்களின் மேல்
மிதித்து நடக்கவும் கற்றுக்கொண்டேன்!

என்னைக் கண்டதும்
ஓடிவரும்
எதிர் வீட்டு மழலை,
வாலாட்டிக் கொண்டு வரும்
சாலையோர நாய்க்குட்டி,
புன்னகைத்து
வணக்கம் சொல்லும் நடைப்பாதை கடைக்காரர்
இவர்களையெல்லாம்
பார்த்தும் பார்க்காதது போல் பாராமுகமாக
கடந்துச் செல்லவும் பழகிக் கொண்டேன்!

கைப்பிடித்து நலம் விசாரிக்கும்
உறவுகளிடமும் நேரமில்லையென
அவசர சமிஞை காட்டி
கைப்பிடி விலக்கி நகரவும்
கற்றுக் கொண்டேன்!

முன்னே விழுந்தவனை
தூக்கி விட நேரமின்றி
தாண்டிச் செல்லவும்
பழகிக் கொண்டேன்!

அதிவிரைவாக சூழலும்
காலச்சக்கரத்தின் பரிணாமத்திற்கேற்ப
என்னை நானே
முழு மனிதனாக பரிணாமித்து கொண்டேன் !
என்ற மமதையில் கண்ணாடி முன் நின்று
என்னைப் பார்க்கிறேன்?

என் தலைக்கு பின்னே
எப்போதும் தெரியும்
மயிலிறகு மகுடம் சூடிய
வெண்ணிற இறகுகள் அசைந்தாடும்
அதிரூபத்தின் அரூபம்
மெல்ல மெல்ல மறைந்து?

இருபக்க கொம்பு முளைத்த
கடைவாய் பல் நீண்ட சாத்தானின் கோர ரூபம்
என் நிஜத்தின் பின்னே நிழலலுருவாய் தெரிகிறது?

● மகா செல்வம்

## எப்போதாகிலும் ஒருகவிதை

காலத்தினாலான குரலொன்றை
தூக்கியலைகிறேன்

இந்தப் பயணத்தின்
கடுங்குளிர் பொழுதொன்றை
கடந்து கொண்டிருக்கிறோம்
நானும் என் நீலமும்

நேசத்தின் எலிமயிர்
போர்வையொன்றை
நமக்காய் இப்பிரபஞ்சம்
பரிசளித்த களிப்பில்
அதில் சில பொத்தல்கள்
இருப்பதற்காக எனக்கு வருத்தமில்லை

நீலத்தோடு பயணப்படுகையில்
இந்த பூமியின் மீது
பாழ்குழிகளை கடப்பதை
ஒரு பறவையின் இறக்கையில்
அமர்ந்து கடப்பதாகத்தான்
தெரிகிறது

இது போதாதா
மீதி நாட்களுக்காகவென
யார் சொன்னது தனிமையிலிருக்கிறேனென
ஒரு போதும் ஒருவரும்
தனிமையில் இருப்பதில்லை

காலம் அவர்களோடே தான்
பெரும் ஒளியெனவும் நிழலெனவும்
தொடர்கிறதை அறியாத வரை
தனிமையின் பேச்சு
நிறைந்திருக்கும்

● சாய் மீரா



உன் ரகசியங்கள் என்று சொல்லும்
அனைத்தையும் சொல்லாமல் நிறுத்திய
அந்த நொடியில் இருந்து தான்
நம் பிரிவு தொடங்கியது.

● கோ. சிவா தமிழ்.

ஓடும் நதியை
ஒரு நிமிடம்
கலைத்து விட்டேன்
சில நொடிகளில்
மீண்டும்
தன்னியல்பில் ஓடுகிறது...!

● ச. இராஜ்குமார்



நெடு நேரமாய்
காட்டு குருவியொன்று
சத்தமிடுகிறது
வேப்ப மரத்தில்...

அதன் இணையைத் தேடுதென்று
முனங்கி சென்றார் மாமனார்...

ச்ச்சுப்போவென
எல்லை கடந்த
வெறுப்பில்
விரட்ட எத்தனிக்கிறார் கணவர்...

ஏதோ ஒரு ஏகாந்தத்திலிருக்கும்
எனக்கு...
அது ஆனந்தத்தில் இசைப்பதாய்
ரசித்துக்கொண்டிருக்கிறேன்...

கிளையசைவில்
குறையவேயில்லை
அதன் சப்தம்...
கைநிறைய
அரிசி குருணையை
அள்ளியெடுத்து ஓடுகிறாள்
என் குட்டி மகள்...

கொத்தி குதறி
தொண்டையை நிரப்பி
அவளுக்கு
நீள முத்தமிட்டு கொண்டிருந்தது
மெல்லிய
ரகசிய குரலில்
அந்த குருவி...

● ஸ்ரீவாரி மஞ்சு

காலப்பெருவெளியில்
உதிர்ந்த விட்ட
ஒற்றைச் சருகென
காட்டாற்றின்
பேரிரைச்சலின்
பெருமலாய்
அங்கலாய்த்திடும்
ஆற்றாமையின்
பெருங்கனத்தில்
சில்லிட்டதொரு
நீள் இரவில்
இடிந்ததொரு
இயலாமையாய்
வறண்டுவிட்ட
நதிப்படுகையின்
மௌன விசும்பலாய்
மௌனித்தே கிடக்கிறது
இந்த விரும்பியலா
தனிமை...

● நிஷா ராஜேஷ்



அன்றொரு நாள்
என் மீது
நீ தூக்கி எறிந்த
சொற்களைத்தான்
இங்கு பத்திரப்படுத்தி வைத்திருக்கிறேன்
உன் ஞாபகம் வரும்போதெல்லாம்
இந்தப் பக்கத்தை
வருடிப் பார்த்துக் கொள்கிறேன்
காயங்கள் கூட சுகம் தானே

● மகேஷ் சிபி

தனக்குத்தானே
நெருப்பு மூட்டுகிறான்
புகைகிறது சுருட்டு...

● ஐ.தர்மசிங்



பிறந்தவீட்டில் இருந்து
இன்னொரு வீட்டிற்கு
செல்கையில் சீருடன் சேர்த்து
கைப்பிடி மண்ணையும்
பத்திரப்படுத்தச்சொல்லி
கொடுத்தனுப்பினார்கள்.

அவர்களின் ஞாபகம் வருகையில்
உள்ளங்கை பார்த்துக்கொள்வேன்.
அதனால் தானோ ஈரமாகவே இருந்தது.
நான் வேறு இடத்துக்கு
மாற்றப்பட்ட தாவரம்.

என் ஆதி மண்ணை அவர்களிடம்
பிரசாதமாகவே பெற்று வந்தவள்.
என் செடி வளர ஒளியருகே
நிற்கத் தலைப்படுகிறேன்.

ஆனாலும் நான் பூக்கும்போது
அவர்களின் நன்றிக்குப் பாத்திரமாக
எந்தவொரு பதிலையும் சொல்ல
அனுமதியில்லை எனும்போது
கவசத்தைப் போர்த்திக்கொள்கிறேன்.
என்னருகே இன்னொன்று
கிளைபிரிகிறது.
கைமாற்றும் மண்ணுக்கு
நெகிழ்வுண்டு எனில்
அதை வாங்கிக்கொள்ளும் பிரதிமை
என்னைப்போலொருவளாக
இருப்பாளாகின் வேண்டாம்
இந்தப்பண்டமாற்று...

சுயத்தின் பிரகாசங்கள்
திணறிப் பூக்கக்கூடாது...

• உமா மஹேஸ்வரி பால்ராஜ்



கண்ணுக்குத் தெரிந்த
அத்தனை கதவுகளையும்
அடைத்து விட்டேன்
காற்றும் ஒலியும் கூட
முட்டி நிற்கிறது
என் நிலத்திற்கு வெளியே
கை கொட்டிச் சிரிக்கிறது
உன் நினைவுகள் மட்டும்
மனக்கதவுக்கு ஏது பூட்டு

● மணி அமரன்

பட்டுப்போன மரம்
ஒன்றுக்கும் உதவாது
என்று நினைக்காதே
அதனைப்
பற்றிக்கொண்டு
உயிர்வாழும்
கொடிகளும்
குச்சிகளில் அமர்ந்து
ஓய்வெடுக்கும்
பறவைகளும்
உயிர்ப்புடன்
வாழ்ந்துகொண்டுள்ளன.

● குளோரிசக்தி



காலையிலிருந்து மாலைக்கும்
மாலையிலிருந்து காலைக்கும்
திரும்பும் கடிகார முட்களைப்
போலவே
உறவிலிருந்து பிரிவிற்கும்
பிரிவிலிருந்து உறவிற்கும்
திரும்பிக் கொண்டிருக்கிறது
இந்த வாழ்க்கை...

வாழ்க்கை மீதான
புரிதல்கள் எப்போதுமே
பிரிவிலிருந்துதான்
தொடங்குகின்றன...

உயிர் தழுவி
உணர்வுகளில் கலப்பதும்
உயிர் கரைந்து
கூடெனச் சாய்வதும்
வாழ்வின் சித்திந்தம்...

ஒரு இலை உதிர்வதைப் போல்
நிகழ்ந்துவிடும் பிரிவுகளை
யாவரும் உதிர்தல் என்று
ஒற்றை வார்த்தையில்
சொல்லிவிடலாம்...
இல்லை,
துளிர்த்தலுக்கான ஆயத்தம் எனவும்
கடந்துவிடலாம்...

எந்த மரமும்
உதிர்தலின் வலியை
உரக்கச் சொல்வதில்லை...
அவை
உலகின் ஓசைகளில் இருந்து
ஒடுங்கி விடுகின்றன...
அந்த மரங்களைப் போலவே
சில மனிதர்களும்...

வலிகளைப் பற்றிப்
பேசிக்கொள்ளாமலே
வாழ்வு திணித்துப் போன
உறவையும் பிரிவையும்
சமன் செய்ய
போராடிக்கொள்கிறார்கள்,
பிழைப்பிற்கான பிரயத்தனத்திற்காக
மட்டுமே...

● சங்கரி சிவகணேசன்



முத்தமிடுவதற்கு
முந்தைய இரவு
யூதாசு என்னோடிருந்தான்.
கானாவிலிருந்து தருவிக்கப்பட்ட
திராட்சை ரசத்தை
நாங்கள் பருகிக்கொண்டிருந்தோம்.
வன்மத்தையொத்த
பருகப்பருக குறையாத ரசம்.
துரோகத்தின் அந்தகாரம்
நெருங்குவதறியாமல் மோனத்தில்
அவன் லயித்திருக்கும்போது
வஞ்சத்தின் விதைகளை
நெஞ்சத்தில் விசிறினேன்.
விசுவாசத்தின் குரல்வளையை
மெல்ல நசுக்கியது
முப்பது வெள்ளிக்காசுகளின்
சிணுங்கலோசை.
அந்த மனுசகுமாரனின்
தீர்க்கதரிசனமோ
சீர்திருத்தமோ
அடுத்தடுத்த அற்புதங்களோ
எனக்கொரு பொருட்டில்லை.
வெறுந்தண்ணீரை
பெறற்கரிய ரசமாக்கியது ஒன்றே
விரோதம்.
அதிகாரத்தின் அச்சாணிகள்
எழுபதை வைத்துக்கொண்டு
முப்பதை அந்தத் துரோகியிடம்
தருவார்கள்.
ஓர் மதுவணிகனின் வயிற்றிலடிப்பது
பரம்பொருளாயினும்
சிலுவையிலடிப்பதொன்றே விதி.

● கௌ ஆனந்தபிரபு

பனை மரத்தை சுற்றி படரும்
ஓணான் செடி
வேப்ப மரத்தில் வளரும்
ஆலம் விதை
மூங்கில் சுற்றி படரும்
பீர்க்கங்காய் கொடி
வேலி பற்றி படரும்
பிரண்டை கொடி
மரங்களோ
செடி கொடிகளோ செய்வதில்லை
ஆணவக்கொலை

● வீ வா கதிரவன்



மரத்திற்கு ஒரு
இலையுதிர் காலம் போல
மனதிற்கு ஒரு
நினைவுதிர் காலம்
இருந்திருக்க
கூடாதா?

இலையின் மீதிருக்கும்
மென் துளைகள் போல
கிடைக்கக் கூடிய
மீச்சிறு சந்தோசங்களையும்
தன் ஆலகால நாவால்
சுழட்டி விழுங்குகிறது
சில உயிர்க்கொல்லி
நினைவுகள்!

● ஆ.விஜயலெட்சுமி

சாரல் என்பது
சன்னமாக விழும்
நீர்த்துளிகள் தான்
என்பாய்

நானோ அவைகளை
உறங்காத
வெள்ளை சில்வண்டுகள்
என அழைப்பேன்

● தங்கேஸ்



## ஔடதம்

வெவ்வேறு மொந்தைகளில்
ஒரே கள் என்பது போலவேதான்
கடும் ஜுரமென்றால்
அவர் “டோலோ- 650”
எடுத்துக்கொள்வதும்
இவர் “எஸ்மோல் - 650”
எடுத்துக் கொள்வதும்
உவர் “கேல்போல் - 650”
எடுத்துக் கொள்வதும்

கவிஞர்கள்
ஆலி என்றாலும்
சீகரம் என்றாலும்
மாரி என்றாலும்
உணர்த்தப்படுவதென்னவோ மழைதான்

சிறு வயதில்
நானும், சுப்பிரமணியும், ரவியும்
ஒரே மிதி வண்டியில் உலா வந்த தடுமாறி
கீழே விழுந்து ஏற்பட்ட சிராய்ப்புகளுக்கு
எனக்கு என் அப்பா இலந்தை இலைகளை
பிழிந்து விட்டதும்
சுப்பிரமணிக்கு அவன் அப்பா
அரிவாள்மனைப்பூண்டு இலைகளை
பிழிந்து விட்டதும்
ரவிக்கு அவன் அப்பா
மூக்குத்திப்பூ இலைகளை
பிழிந்து விட்டதும்
நினைவில் எனக்கு
வந்து வந்து போகவே செய்கிறது

● சுப்பையா கந்தையா



கண்கூசும் ஒரு வெளிச்சம்
மிக அருகே வந்ததும்
என் கனவு
ஒரு பட்டாம்பூச்சியைப் போலப்
பறந்து போய்விட்டது.

நான் கவனித்தேன்
பிரித்தறிய முடியா வண்ணங்களால் நிறைந்த
அதன் கால்களில் ஒட்டியிருந்தது
என் வாழ்வின் துளிமகரந்தம்.

இதுவரை தரை வாடகைக்கு விடப்பட்ட
என் இரவு
தேன்துளிகள் கொண்ட
சிறிய பூக்களாலான ஒரு தோட்டம்
என்பதை அப்போது உணர்ந்தேன்.

நீர் நிறைந்த பூவாளியுடன்
நிமிர்ந்து பார்ப்பவரை
உங்களுக்கு அடையாளம் தெரிகிறதா?
கால் சகதியைப் பார்க்காதீர்கள்.

தண்ணீரில் தவறி விழுந்த அலைபேசியை
அழுந்தத் துடைத்து விட்டு
மகளையொத்த வயதில் கடந்து போகும் காலத்திடம்
‘ஒரு புகைப்படம் எடுக்க முடியுமா?’ என்கிறேன்.

தூரத்தில் ஒரு பட்டாம்பூச்சி
பனி விலகும் தோட்டம்
நீர் நிறைந்த பூவாளி
சொட்டும் நினைவுடன்
இன்னும் கூட
ஒரு பசிய இலையைப் போல நான்...

வேறு ஏதோ பூவுடன் பேசிக்கொண்டு
முதுகைக் காட்டியபடி
அங்கே ஒரு உருவம் நிற்கிறது.

கண்களில் நீர் தளும்ப
புகைப்படத்தையே உற்றுப் பார்க்கிறேன்
பட்டாம்பூச்சி மீண்டும் வந்தமர்கிறது
என் தோளில்.

● மா. காளிதாஸ்



அப்பா இறந்தப் பின்னரும்
பொட்டிட்டுப் பூச்சூடிக்கொண்டாள் அம்மா

அப்பா இறந்தப் பின்னரும் கலர்ப்புடைவைகளும்
கண்ணாடி வளையல்களும் அணிந்திட்டாள் அம்மா

அப்பா இறந்தப்பின்னரும்
அப்பாவின் உடைமைகளையெல்லாம்
அப்படியே பாதுகாத்து வைத்தாள் அம்மா

அப்பா இறந்தப் பின்னரும்
அப்பாவின் ஒவ்வொருப் பிறந்த நாளையும்
கொண்டாடித் தீர்த்தாள் அம்மா

அப்பா இறந்தப் பின்னரும்
தன் வாழ்வை தன் விருப்பம் போல
ரசித்து வாழ்ந்தாள் அம்மா

அப்பா இறந்தப் பின்னரும் வழமைப்போல
வேலைக்குப்போய்வந்தாள் அம்மா

அப்பா இறந்தப் பின்னரும்
நண்பர்களின் விசேசங்களில்
முன் ஆளாய்க் கலந்துகொண்டாள் அம்மா

அப்பா இறந்தப் பின்னரும்
அப்பாவின் உறவுகளையெல்லாம்
சேர்ந்து வாழ்ந்தாள் அம்மா

அப்பா இறந்தப் பின்னரும்
அப்பாவை ஏற்க மறுத்த
தன் உடன்பிறப்புக்கள் முன்
வைராக்கியமாய் வாழ்ந்து காட்டினாள் அம்மா

அப்பா இறந்தப் பின்னரும்
அப்பா இல்லாத குறைத் தெரியாமல்
எங்களை வளர்த்தெடுத்தாள் அம்மா

அப்படித்தான் எங்களுக்கு
அப்பா இறந்தப் பின்னாட்களில்
அப்பாவுமாகிப் போனாள் அம்மா

உண்மையில் அம்மாவிற்குப் பதில்
அப்பா இருந்திருந்தால்
இதெல்லாம் சாத்தியமாகுமா
என்று சொல்வதற்கில்லைதான்

ஆயினும்
என் பிரார்த்தனையெல்லாம்
யார் யாருக்கும் வாய்த்திட வேண்டும்
அம்மாவைப்போல ஆத்மார்த்தமாய்
தன்னையும்தன் சார்ந்தோரையும்
நேசிக்கும் ஓர் உள்ளம்

● ரிஸ்கா முக்தார்



பாறையொன்று
தனக்குள் இருக்கும்
சிற்பத்தைக் கண்டு கொள்வதும்

சிற்பமொன்று
தான் ஒரு பாறை
என்பதை நினைவில் கொள்வதும்

இருவேறு வழிகளில்
சென்று அடைந்திடும்
ஒரே ஞானம்...

● கி.கவியரசன்

பார்த்து பாதம் வை
உலகங்கள் கலைந்துவிடும்
புற்களில் பனித் துளி...


● நம்.திரு.ரஅம்ஏ

மாடி தண்ணீர்த்தொட்டி
நிரம்பி வழிந்து
சுற்றுச்சுவர் தாண்டி
பொழிகின்ற நீருக்கு
கடன் வைக்காது

அன்றைக்கு அன்றே
முதல் பூக்களை சுற்றுச்சுவர் தாண்டி
காம்பவுண்ட் டெலிவரி செய்து
மகிழ்வித்துவிடுகிறது பக்கத்து வீட்டு
மகிழம்பூச்செடி.

பக்கத்துவீட்டுக்காரர் தான்
நமக்கு இரண்டு புன்முறுவல்
ஒரு குறுஞ்சிரிப்பு
பாக்கி.

● அ.சீனிவாசன்



தோற்றவன் அமைதியாய்
அமர்ந்திருக்கிறான்.
ஒப்புக்கொள்கிறான்...
இரண்டாம் பதிப்புகளற்ற
போரின் அமைதிப் பேச்சு வார்த்தையில்

வண்ணங்கள் இருட்டுப்போர்வைக்குள்
சுருண்டு கொள்வதைப்போல்
எண்ணங்களின் அடர்த்தி
சமாதான ஒப்பந்தங்களுக்குள்
நீர்த்துப் போய் விடும்...

வயிற்றின் கூக்குரலை அடக்கி
மறுபடியும் சிந்திப்பதற்கு
தசாப்தங்கள் தேவைப்படலாம்...

உலகநாடுகள் மகிழ்ச்சியறிவிக்கும்...
இயல்பு வாழ்க்கை திரும்பிவிடும்
இறந்து போன சமூகத்தின்
உலர்ந்து போன நம்பிக்கைகள் தின்று...

● ச.ஆனந்தகுமார்

என்றோ ஒருவன்
நடந்த ஒத்தையடிப் பாதை
இன்று
ஆறு வழிச் சாலையானது!

● த.முருகன்


மரத்திலிருந்து
உதிர்ந்த
காய்ந்த இலை.
தாங்கிப் பிடித்தது
ஓடைநீர்.

● கு. பிரபாகரதாஸ்



அப்போதெல்லாம்
டைரிகளின் பக்கங்கள்தான்
முகநூலின்
கையெழுத்துப்பிரதியாய் காட்சிதந்தன
சிலருக்கு 'ஒன்லி மீ' ஸ்டேட்டஸ்களாய்...
குட்டியூண்டு டைரியில்தான்
மரணிக்கும்வரை எழுதினார் தாத்தா;
கல்யாணத் தரகர்களின் முகவரிகள்தான்
பெரும்பாலும் நிறைந்திருக்கும்...
சுசீலாக்கா டைரிகளில்
காதல் கவிதைகள்
பக்கம்பக்கமாகக் கிறுக்கப்பட்டன
அவள் கையெழுத்து
கவிதைகளைவிட அழகு...
கவித்துவமில்லா
கல்யாணச் சடங்குக்கு பிறகான
ஒவ்வொரு நாளின்
ஏமாற்றத்தையும்
சண்டை சச்சரவையும்
எழுதியெழுதியே
ஆற்றுப்படுத்திக்கொண்டாள்
மாதவிடாய் நின்ற தேதியை
குழந்தைக்கான எதிர்பார்ப்போடு
எழுதிய டைரிக்குறிப்பு
கண்ணீரில் நனைந்திருந்தது...
அவளின் திடீர் மரணத்துக்குப்பின்
அதே டைரி தான்
முக்கிய சாட்சியமானது...
அம்மாவின் டைரிகளில்
ஸ்ரீராமஜெயமும்
பால்க்கணக்கும்
மளிகைப்பொருள் பட்டியலும்கூட
பின்பக்கத்தில் எழுதப்பட்டிருந்தது
சில கணக்குகள்
கூட்டல், கழித்தல் தவறு திருத்தப்பட்டும்...
அப்பாவின் டைரியை
ஆங்கிலம் கற்கப் பயன்படுத்தலாம்
எளிய ஆங்கிலத்தில்தான்
பக்கம் பக்கமாய் எழுதியிருந்தார்...
நானும்கூட அடம்பிடித்து டைரி வாங்கி
ஏதேதோ கிறுக்கிவைத்ததற்காக
அடிவாங்கியதுண்டு...
இப்பவும் டைரிகள் வருகின்றன
வாங்கிப் பரிசளிக்கப்படுகின்றன
பரிசுகள் பாதுகாக்கப்படுகின்றன
வரலாற்றுச் சின்னமென...

• வத்திராயிருப்பு தெ.சு.கவுதமன்



துயரங்களென்னை
நெருங்கும் போதெல்லாம்
என்னிரு கைகளையும் தூக்கி
அவற்றை
வாரியணைத்து முத்தமிட்டு
வரவேற்கத் தயாராகிவிடுகிறேன்...
எனதறையின்
மெத்திருக்கையில் வித்தாரமாய்
சாய்ந்து கொண்டு
குப்பி குப்பியாய்
குடித்து வீசும் துயரங்கள்,
கொஞ்ச கொஞ்சமாய் பெருத்துப்
பின்
பெருந்துயரங்களாகிப்
போகின்றன...
இந்நீளிரவின் நடுவில்
தள்ளாடும்
அத்தனை துயரங்களையும்
பிடித்துக்
கவிழ்ந்து கிடக்கும்
குப்பிக்குள்ளடைத்து
குப்பைத் தொட்டியில்
வீசியெறிந்துவிட்டேன்,
சிறு போதைக்காகத்
தவிக்கும் யாரும்
அக்குப்பிகளை யெடுத்து
என் துயரங்களைக்
குடித்துவிடாதிருக்க வேண்டும்...!

● தங்கராஜ் பழநி



## காதலிசம்

மீண்டும் தீண்டுவாய்
என்பதற்காகவே
நீ தீட்டும் ஓவியத்தில்
பிழையாயிருக்க
வேண்டுகிறேன்.

நீ மிதித்துச்சென்ற
சருகுகளனைத்தும் நான்
நீ கவனமாய்த் தவிர்த்த
பூக்களனைத்தும்
என் காதல்.

இனிப்பை போலவே
கசப்பையும் ருசிக்கிறேன்
விட்டுவிடச் சொன்னது
நீயல்லவா.


எதையும் கண்டுகொள்ளாது
எல்லாவற்றினையும்
கடந்து செல்லும்
இலகுவோடு சுதந்திரமாக
திரிகிறது காதல்.

முதல்முறையாக
சிகப்பு வண்ணம் தேர்ச்சியைக் குறிக்கிறது
கவிதைக்கு இதயமிட்டிருக்கிறாய்.

● ரகுநாத் வ

கருவிழிகளை
தூக்கம்
சுற்றிவளைக்கும்
இரவுப்பொழுதில்
காதலின் எஞ்சிய
இறந்தகால
நினைவுகளை
காலம்
கணக்குப் பார்க்கும்
இன்றும்
நாளைய மறுநாளும்...

● ஜீ.சுமித்ரா



எனது அருமை
தனிமையே...
நானும் நீயும்
பேசிக் கொள்வது தான்
எவ்வளவு ஆனந்தம்...

காற்றைக் கூட
உன்னால்தான்
உணரமுடிகிறது...
காதலைக் கூட
உன்னால் தான்
நேசிக்க முடிகிறது...

கவிதையை கூட
உன்னால் தான்
எழுத எழுதமுடிகிறது...
என் கண்ணீரை கூட
உன்னால தான்
ரசிக்க முடிகிறது...

எந்த உறவாலும்
என்னில் உன்னை
பிரிக்க முடியாது...
எவ் அழகை காட்டியும்
உன்னை
வசிகரிக்க இயலாது...

தேடி வந்த என்னை
கட்டி அணைத்து
மடியில் கிடைத்தி
ஆறுதல் சொல்கிறாய்...
என் தேகம் எல்லாம்
ஊர்ந்து சென்று
உரிமை கொள்கிறாய்...

என் சுகமும் நீயே
என் சோகமும் நீயே
நிலையற்ற வாழ்வில்
என் நிரந்தரம் நீயே...

● நந்தா



சில தேவைகளின் போதெல்லாம்
தீர்ந்துவிடுகிறது ஆசை
எந்த ஒப்புதலுக்கும் காத்திராமல்

சில ஒப்புதல்களை
ஏற்புடையதாக்கும் முன்னமே
காற்றழுத்த தாழ்வுநிலையில்
கட்டுப்பாடுகளை இழந்த
கடலலையாய் மனம்.

ஆடிக்களைத்துப்போவதற்குள்
ஒரு அடையாளமிடத்தெரியாத
அற்ப நிகழ்வுகளுக்கு
அடிமையாய் மண்டியிடுகிறது
வாழ்வு.

குத்துப்பட்ட வலியோடு
செத்துபோகும்போது எழுகிற
பெருத்த மௌனங்களின்
கதறலுக்கு விடைதேடுவதென்பது
விலாசமற்றவனின் வீட்டை
விழிகளற்றவன் ஆராய்வது போலத்தான்.

இறந்தபின்பு...
சொர்க்கமென்றும்
நரகமென்றும்
சொல்லிக்கொள்கிறவர்களுக்கு
எப்படி உணர்த்த...?
வானமென்பதே...
எதுவுமற்ற ஒரு வெளிதானென்று.

வேண்டுமானால்
வெளியிலுலாவும் வேற்று கிரகங்கள்
தன் ஒப்புதலை
ஒருமனதாக்கட்டும்.

யார்கண்டது...
ஆசைகளை துறக்காத
அதிசய புத்தன்கள்கூட
அப்போது பேசுபொருளாகலாம்.

● கா வெங்கடேஸ்வரன்



## வழிகாட்டும் வாழ்வானது

ஆண்டுதோறும் கொண்டாடுகிறோம்
ஆணும் பெண்ணுமாய்
காதலர் தினமோ
நெருப்பாற்றில் நீந்தி நீந்தி
கரை சேரலும் சேராததுமாய்

கலாச்சாரக் காவலர்கள்
உலா வருவர்
தடியெடுத்த தண்டல்கார்களாய்
காதலர்களின் கரங்களில்
ராக்கி அணிவிக்கும்
ரௌடித் தனத்துடன்
மௌனமுடைத்து முறியடித்தலில்
கவனம் காதலர் தினத்தில்

சாதிய ஆணிவேர்களை
வேரடி மண்ணோடு களையாது
வாய்ச் சவடாலில் வீணே கழிகிறது காலம்
தானே நிகழ்கிறது
ஆணவக் கொலைக் கோலம்

மயக்க ஊற்றான மதம்
மயக்கக் காதலில் வெல்கிறது
மானுடரைக் கொல்கிறது

தேவதையாய் காதலி திருமணத்துக்கு முன்பு
வாழ்க்கைச் சூறாவளியில் சரித்திர நாயகியாய்
திருமணத்துக்குப் பின்பு

வரலாறை வாசியுங்கள்
காதலுக்காகவும் வரலாறை வாசியுங்கள்

செல்வம் துறந்த சீமாட்டி
செல்வமாய் சேர்த்தணைத்த
ஏந்தல் ஏழையின் பெருமாட்டி
வயதும் அழகும் செல்வமும் சொகுசும்
காதலுக்கில்லை

புரிதலும் அன்பு சொரிதலுமே
காதலுக்கானது

மனைவியின் மரணம்
மார்க்சுக்கும் மரணவாயில்
மார்க்கமானது
செம்புலப் பெயல்நீராய்
அன்புடை நெஞ்சங்களின்
காதல் கோட்டையானது

மாறாதது மாற்றம் ஒன்றே
மகோன்னதம் விதிவிலக்கானது
மார்க்ஸ் ஜென்னி காதலுக்கு

வழிகாட்டும் வாழ்வானது
காதலர்களின் வாழ்தலுக்கு

● பெரணமல்லூர் சேகரன்



## அவசரம் மற்றும் நிதானம்

நீங்கள் ஏன் இத்தனை
அவசரப்படுகிறிர்கள்
காதலைச் சொல்வதற்கு.?
காதல் என்றால் சும்மாவா?

நீங்கள் ஏன்
இத்தனை நிதானமாக
காதலைச் சொல்கிறீர்கள்?
காதல் என்றால் சும்மாவா?

நீங்கள் ஏன் சொல்லவேயில்லை
உங்கள் காதலை.?
அதே காதல் என்றால்...

சும்மா சும்மா என்று வருவதற்கு
காதல் ஒன்றும் சும்மா இல்லை
அது சும்மாவும் இல்லை

காதல்என்பது
உண்மையின் வெளிப்பாடு
நிதர்சனத்தின் சாட்சி
நிம்மதியின் நிரந்தரம்
அன்பின் ஆழம்
ஆசைகளின் தீர்வு
கடைசியாக அது வாழ்வின்
நீண்ட நெடிய ஆதாரம்...

● வி.வி. கலைச்செல்வி

கருப்பு வெள்ளை
ஆதிப்போர் இன்னும் முடியவில்லை
உதிரும் குருதி ஒரே நிறத்தில்!

ஆட்டம் முடிந்ததும்
அனைவருக்கும்
ஒரே செவ்வகப் பெட்டி!

சதுரங்கத்தில்கூட
மந்திரிகள்
நேர்வழியில் பயணிப்பதில்லை!

● நரேன்



என் பிரியங்கள் ஒவ்வொன்றும்
மிகப் பிரியம் நிறைந்தவை.
காலைகளும் மாலைகளும்
கடந்து போனாலும்
என் பிரியங்கள் எப்போதும்
கால்கடுக்க நிற்கின்றன
கடந்த நாட்களிளேயே.

மண்ணோடு கலந்த
மழைநீரை போன்று
என்னோடு கலந்த நினைவுகள்
ஒவ்வொன்றும் பொன்னான
பிரியத்தின் சிதறிய குமிழிகள்.

அகன்ற வான்வெளியின்
திரண்ட நிலவொளியாய்
நெஞ்சோடு நினைவாகும்
என் சொல்லிலடங்காத
பிரியங்கள் பெரும் மௌனத்தில்
வலை பின்னி உயிர் வாழும்.

பார்வைகளை வார்த்தைகளை
பற்றியபடி சில நேரம் என்
பிரியங்கள் ஏக்கப்பட்டு
முகம் மறைக்கும்.
பெரும்பாலும் இரு நாளில்
சரியாகி என் கரம் பற்றும்.

பிரியமாய் உயிர் பிரியமாய்
அடிமைப்பட்டு கிடந்தாலும்
பெரும் பிரியங்கள் தவறாக
பரிமாறும் போது
வெறும் பிரியமென்றே பொருந்தாது
பிரிவுக்குள் தொலையும்.

● கீதாவணி



பகையில் பொருள் இல்லை
மனம் மீண்டும் தேடுவதில்
தவறும் இல்லை...

அந்தப் பாதையில்
நடந்து சென்று பல வருடங்கள் ஆயிற்று...
பழைய நினைவுகளை
நினைத்துக் கொண்டே செல்கிறேன்...

நிமிர்ந்து பார்க்கும் அளவிற்கு
அந்த பனைமரம் வளர்ந்து இருக்கிறது...
பூவரசம் பூக்கள் பூத்து
மரம் கொஞ்சம் பருத்து இருக்கிறது...

அது நிறைய மலை வேம்பு
மரம் ஒன்று இருந்தது
அதில் மைனாக்கள் கூடு கட்டி இருந்தது...
அந்த மரத்தையும் காணவில்லை
அதிலிருந்த மைனாக்களையும் காணவில்லை...

கொஞ்சம் தூரத்தில்
இருந்த மூங்கில் புதர்கள் இப்போது
காடு போன்று மண்டி இருந்தது...
குயில்கள் கூட்டமாக வசிக்கும்
என்று நினைக்கிறேன்...
குயிலோசைகள் கேட்டது...

அந்தப் பாதையின்
முடிவில் தான்
அவர்கள் வசிப்பிடம் இருக்கிறது...
பொருளில்லாத பகை ஒன்றில்
பிரிந்து சென்ற உறவு அது...

காதலை சொல்ல காத்திருக்கும்
காதலனை போன்று மனம்
அடித்துக் கொண்டது...
பேசுவார்களா மீண்டும்
பகை பார்ப்பார்களா
என்று தெரியவில்லை...

என்ன பகை என்று
என் ஞாபகத்தில் இல்லை
அவர்களுக்கும்
அப்படித்தான் இருக்கக்கூடும்...

● பன்னீர்செல்வம்



பேருந்தில் ஜன்னலோரமாக
அமர்ந்து கொண்டு
இரசித்துக் கொண்டு செல்கையில்...
கண்ணில் படும் ஏதோவொரு காட்சி
ஏதோ உங்களோடு
அன்பாக இருந்துவிட்டு பிரிந்து போன
ஓர் ஆன்மாவின் நினைவை
மீள மனதில் கொண்டு வரும்...

அதை கண்டபின் முழு நினைவுகளும்
அந்த ஆன்மாவின் சாயலில்தான்
நின்று கொண்டு இருக்கும்...

பயணம் தொடர்ந்து கொண்டே செல்லட்டும்
என்று நினைத்த பயணம்
உள்ளம் கலங்கி எப்பொழுது
பயணம் நின்று விடும்
என்று ஏங்கிவிடும்...

ஏனோ தானோ இந்த ஜன்னலோர இருக்கைகள்
எப்படி எல்லாம் உள்ளத்தில் நுழைந்து
உயிர்களை நினைவுபடுத்துகின்றது...

ஜன்னலோர இருக்கை
வெறும் இருக்கை அல்ல
அது உணர்வுகளை
உயிர்கொடுக்க வைக்கும் அரிய ஆசனம்.

● பஹ்ரியா பாயிஸ்

எனக்கே எனக்கான பிரியங்கள்
எல்லாம் தொலைந்தே போனது...
என்னுள் நீ நுழைந்த பொழுது...

ஏதோ மாயம் செய்து தான்
பிணைக் கைதியாக
பிடித்து வைத்துள்ளாய்...

சிறகுகள் இருக்கிறது
வானம் வெட்ட வெளிச்சம்...
அன்பின் பிடியில் தான்
அகதியாக நிற்கிறேன்...

அன்பை ஊற்றி
ஆயுளை வளர்த்து விடு...
இன்னும் சற்று வாழ்ந்து கொள்கிறேன்...

● மௌனி



நீ அருகில் வரும் வரைதான்
இந்த வீம்பெல்லாம்.
நீ தொட்டவுடன் என் வீம்பு
உன்னைக் கட்டி அணைக்கிறது.

அப்படியே விட்டுச் செல்கிறாய்
உன் விரல் பிடிக்க ஏங்கி
உன் பின்னாலேயே வருகிறது
என் வீம்பு.

ஒவ்வொரு வீம்பிற்கும்
ஒவ்வொரு கால அளவு
என் வீம்பிற்கு
நீ பார்க்கும் நொடிதான் காலஅளவு.

உன்னை பார்க்கக் கூடாது என்று
வீம்பு பிடிக்கிறேன்
பார்க்க வைக்கிறாய்.

பேசக்கூடாது என்று
வீம்பு பிடிக்கிறேன்
பேச வைக்கிறாய்.

நினைக்கக் கூடாது என்று
வீம்பு பிடிக்கிறேன்
நினைக்க வைக்கிறாய்.

உன் அழைப்பிற்குத்
திரும்பக்கூடாது என்று
வீம்பு பிடிக்கிறேன்
திரும்ப வைக்கிறாய்.

என் வீம்பையெல்லாம்
வீம்பாய்த் தகர்த்துவிட்டு
கடைசியில் சொல்கிறாய்
என்னை 'வீம்பு பிடித்தவள்' என்று.

ஆம் நான் 'வீம்பு பிடித்தவள்'தான்
நீ செய்யும் வீம்புகள்
மிகவும் பிடித்தவள்.

• ராஜிலா ரிஜ்வான்



திசை தெரியாமல்
பறக்கிறது பல்லி...
மரக்கிளை மறந்து
நடக்கிறது பறவை...
ஓட்டப்பந்தயத்திற்கு
தயாராகிறது நத்தை...
பேச்சுப்போட்டிக்கு மேடை ஏறி
“மைக்” கை சூழ்ந்து கொண்டது
எறும்புகள்...
பிரியமாய்
உயரம் தாண்ட
காத்திருக்கின்றன
யானைகள்...
குகைக்குள்ளே
ஓட்டப்பந்தயத்தில் தோற்றும்
கம்பீரமாய் தூங்குகிறது
சிங்கம்...
மனித உருவெடுத்து
நடக்க ஆசைப்படுகிறது.
மண்புழு...
பொம்மைகளோடு...
தெருவில் விளையாடும் –
குழந்தைகளுக்கு...
விரிந்த உலகத்தின்
மெகா அதிசயங்களைப் பார்க்க –
இன்னும்... இன்னும்... நிறைய
கற்றுத் தருகிறது வானம்...!

● ஆரிசன்

அன்பெனப் பொய் சொல்லி
குவளை நிரப்பும்
போலிக் கடவுள்
புழுக்கொல்லிப்
பூண்டுகளையும் கலந்து
கொடுத்துக் காத்திருக்கும்
வார்த்தைகளினூடே
வழிந்து விடாமல்...

மூளைச் சலவை
செய்தவளிடம்
தோற்ற ஆத்மா
குப்புற விழுந்து
விழிகளால் மண் தோண்டி
விசாரித்துக் கொண்டிருக்கிறது
நியாங்களை...

● அ.ராஜ்குமார்



தூரத்து மலையுச்சி
எதிரிலிருக்கும் மரங்கள்
படர்ந்திருக்கும் சாலை
விடைபெறும் பிறை நிலா
எட்டிப்பார்க்கும் சூரியன்
நெருக்கமான கான்கிரீட் வீடுகள்
கணநேரத்தில் அனைத்தையும்
காணாமல் போகச்செய்கிறது
கடும்பனிசூழ் புலரி
குளிர்ந்த தேகத்திலிருந்து
வெளிவரும் ஆவி
சத்தமிட்டபடியே வரும்
மோட்டார் சைக்கிளின்
வாகன வெளிச்சம்
புல் நுனியில்
திரண்டிருக்கும்
வெண்பனி துளி
இப்படியாக இயற்கையை கிழித்து
இதயத்தில் நுழைந்த
காதலின் சுடர் நீ...

● பிரபுசங்கர் க

காதலோடு நீ பேசு
தலை கோதலோடு
கொஞ்சம் இசைந்து...
நான் புல்லாங்குழலாகிறேன்.!!

● ஷீபா ராணி

## அன்பென்ற ஒற்றைச்சொல்

எல்லா உயிர்களுமே அன்பென்ற
இந்தச் சொல்லைத்தான் தேடுகிறது...

அதற்கென்று சில வேளைகளில்
நிறையவே விலை கொடுக்க வேண்டியுள்ளது...
நிறைய தியாகங்கள் தேவைப் படுகிறது...

அதற்கென்று விலையும் பேசப்படுகிறது...

நிறையவே ஏற்ற தாழ்வுகளும்
நிறங்களும் கூட இருக்கிறது...

உண்மை அன்பை எப்படி
கண்டறிவது என்பது இந்த கண்களும்
மனதுக்குமே தெரியாமல் போய்விடுகிறது

எதிர் பாராமலே கிடைக்கும்
ஒரு சிறுபுன்னகை,
ஒரு இதமான வருடல்
பாரபட்சமற்ற அணைப்பு...
ஒரு கரிசனை...
இவையெல்லாம் கிடைக்கும் போது
அந்த ஒரு நிமிடம்தான்
இந்த உலகை சுழல வைத்துக் கொண்டிருக்கிறது
என்பதை தவிற வேறு என்ன சொல்ல முடியும்...

● ஜெயசிங் டிஜி



மலர்கள்தான் எவ்வளவு அழகு
எவ்வளவு நறுமணம் எத்தனை வண்ணம்
எவ்வளவு மலர்ச்சி எவ்வளவு மகிழ்ச்சி.

அதீதங்களை
தாங்க இயலாத பிரபஞ்சம்
ஒரே நாளில்
உதிர்த்து விடுகிறது...

பேரன்பின் கனத்தை தாங்க இயலாத
இதயங்களும் அப்படிதான்
சட்டென உதிர்த்து விடவே
துடிக்கின்றன...

ஒரு மலரைப் போல்
எவ்வளவு மென்மையாயினும்
பேரன்பு உதிர தயாராக வேண்டும்.

● கோ.லீலா



என்னை விட்டு நெடுந்தூரம்
பயணப்பட்டுப் போனாய் நீ
உன் நினைவுகளோடு இருந்தேன்
நான்...

என் அன்பிலிருந்து
விலகிக் கொள்ள எத்தனித்தாய் நீ
மன்னிக்கப் பழகிக் கொண்டேன்
நான்...

இந்நேரம் யாருக்கேனும்
முதல் முத்தத்தைப்
பரிசளித்திருப்பாய் நீ
உன் கடைசி முத்தத்தையும்
பத்திரப்படுத்திக் கொள்கிறேன்
நான்...

காதலென்பது
கழிவிரக்கம் கொள்வதல்ல
அது
நாய்க்குட்டியின்
நன்றியுணர்வைப் போன்றது

ஆதலால் தான்
உன் சாயலையொத்தவர்கள்
என்னைக் கடந்து செல்லும் போது
அவர்களுக்காகவும்
நான் பிரார்த்தித்துக் கொள்கிறேன்...

● சித்ரா புபேஷ்குப்தா



## கஸல்

அன்பைமட்டுமே சுமந்த
இதயத்தின் பாவம் போதாதுதான் எனக்கு

இன்னும் நீளமாய் விழட்டும்
என் வாசலில்
தண்டனையான மரணத்தின் நிழல்

நம்பத்தான் முடியவில்லை
காதலை ஒரு நிழலாய் மட்டுமே
படரவைத்த ஒளி
அவள் விழிகளில் பதுங்கியிருந்ததை

தலைமறைவு வாழ்க்கைதானே கபடத்திற்கு
பிறகெதற்கு அது மாறுவேடமிடுகிறது

துன்பத்திற்கு வேறொரு நாதி
இல்லை என்பதால்
அடைக்கலமாயிற்று என்னிடம் அது

உலகிற்கு வெளியேயும் வீசுகிற காற்று
மௌனித்துவிட்ட எனதில்லம்
உறையவைத்துவிடும் என் மூச்சை இனி

என்ன செய்ய விதியை
இருள்கரையாத விடியலே
எனது கிழக்கிற்கு அருளப்பட்டுள்ளது

● கோ. பாரதிமோகன்

அத்தனை
காரணங்களுக்கு நடுவிலும்
நம்முடன் பேசியவர்கள்

இன்று
ஏன் பேசமுடியவில்லை என்பதற்கு
காரணம் கூற துவங்கும் முன்
அன்பு கரைய துவங்கியிருக்கும்.

● அபூ சுகந்தன்

படைப்பு
சமூகத்தின் இணைப்பு

## சிறை வாசிகளுக்கு

# புத்தக தானம் செய்வீர்!

**"ஒரு எழுத்து மனிதனின் வாழ்வை மாற்றி அமைக்கும்" என்ற உயரிய எண்ணத்தோடு புத்தகங்களைத் திரட்டிக்கொண்டிருக்கும் சிறைத்துறையின் ஒப்புதலோடு இலக்கியப் படைப்புக் குழுமம் தமிழ்நாட்டில் உள்ள அனைத்துச் சிறைச்சாலை நூலகங்களுக்கும் நூல்களைச் சேகரித்துக்கொண்டிருக்கிறது.**




புத்தகங்கள் அனுப்ப வேண்டிய முகவரி

**இலக்கிய படைப்பு குழுமம்**

#3, அஜந்தா டவர்ஸ், தரைத்தளம், கார்ப்பரேஷன் காலனி தெரு,
கோடம்பாக்கம், சென்னை – 600 024

Ph: +91 7338847788

padaippu admin@padaippu.com www.padaippu.com